# கலைச்சொல் ஆக்க உத்திகள்

பெ.சந்திரசேகரன்,
உத்தமம்-பணிக்குழு-01: கலைச்சொல்லாக்க வல்லுநர் குழு
அட்லாண்டா, ஒன்றிய அமெரிக்கா. perichandra@yahoo.com

---

## நெடும் பொழிப்பு

இக் கட்டுரையின் நோக்கம் தமிழ் மொழியில் புதிய கலைச் சொற்களை வல்லுநரும் பாமரரும் ஒருங்கே எளிதில் படைக்க உதவும் பொதுக் கோட்பாடுகளையும் அக்கோட்பாடுகளின் படி ஒழுகும் உத்திகளையும் முன்வைப்பதாகும். இங்கே உள்ள செய்திகள் ஆசிரியர் கடந்த சில ஆண்டுகளாக இணையத்தில் கலைச்சொற்களைத் தாமே படைத்தும் அவற்றை உலகளாவிய தமிழர் குழாத்துடன் அலசியும் ஊடாடியும் பெற்ற பட்டறிவிற் பலனாகும்.

இக் கட்டுரை கீழ்க்கண்டவாறு அமைகிறது:
1. தமிழ்க் கலைச்சொல் புழக்கத்திற்கு இன்றைய தடைகள்
2. இன்றைய கலைச்சொல்லாக்கக் குறைகள்
3. அக்குறைகளைக் களையும் கோட்பாடுகள்
4. அந்தக் கோட்பாடுகளை ஒழுகும் குறிப்பிட்ட சொல்லாக்க உத்திகள்

## தமிழ்க் கலைச்சொல் புழக்கத்திற்கு இன்றைய தடைகள்:

இந்தத் தலைப்பின் கீழ் இருவகையான தடைகள் அலசப் படும். அவையாவன:

1. பண்பாடு-உளவியல் தொடர்பான மாந்தத் தடைகள்
   தன்னடையாளத் தடைகள்
   தமிழ்மொழியால் இயலாதெனும் சாக்குகள்
   தமிழ்மொழியில் இல்லாமைச் சாக்குகள்
   விரும்புபவர்களும் நடைமுறையில் தமிழ்க் கலைச்சொற்களைப் புழங்காமை
   சமுதாய/வணிக நிறுமங்களின் வழு

## 2. நடைமுறைக் கலைச்சொல் துறைத் தடைகள்

இவை உண்மையான கலைச்சொல் துறையின் குறைகள். அவை கீழ்வருமாறு வகைத்து அலசப்படும்:

கிட்டாமை: உருவானவை பரவலாகக் கிட்டாமை

கூட்டுத் தொடர்கள்: இது மிகப் பெரிய அடைப்படைக் குறையாகும். பெயர்ச்சொற்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அவற்றைக் கோப்பது, சூழற்குறிப்பைக் கருதாமல் தேவையற்ற விளக்கச் சொற்களைக் கோத்துக் கலைச்சொல்லை நீட்டுதல் ஆகியன இதன் காரணம்.

மிகுநீளம்: கூட்டுத் தொடர்களை வழங்குவதால் கலைச்சொற்கள் ஆங்கிலச் சொற்களைவிட மிக நீண்டோ, மற்ற குணங்களாலோ ஏற்கும் வகையில் அமையாமை. மேலும் இவை பேச்சு/எழுத்து முயற்சி. அச்சு/கணிநினைவுத் தேவைகள் ஆகிய பலவகைகளில் தேவைகளை மிகுத்துகின்றன.

தெளிந்த எளிய சொல்லாக்க உத்திகள் பரவாமை:

சீரின்மை: கலைச்சொற்களில் குறிப்பிட்ட கருத்துக்குக் குறிப்பிட்ட சொல்லமைப்புச் சீர்மையின்மை

பொருணுட்ப வேறுபாடின்மை: கிடைக்கும் கலைச்சொற்கள் ஆங்கிலம் போல் நுணுகிய பொருள் வேறுபாடுகளைக் காட்டும் அமைப்பு இன்மை

## கலைச்சொல்லாக்க உத்திகள்:

அடிப்படை உத்திகள்: தமிழ்ச் சொல்லமைப்பைப் புரிந்துகொள்ளுதல்; சொற்களை எவ்வாறு எளிதில் பகுப்பது; எவ்வாறு எளிதில் கோப்பது என்பன இங்கே காட்டப் படும்.

கூட்டுத் தொடர் தவிர்ப்பு: இவை சூழல்விளக்கக் கூட்டு, துணைவினைக் கூட்டு, பண்புச்சொல்லாக்கக் கூட்டு என்று வகைத்து அலசப் படும்; அவற்றை எளிதில் தவிர்க்கும் உத்திகளும் அலசப் படும்.

தன்வினைச் சொல் வழக்கம்: தமிழ்மொழியின் பெருவலிமை தன்வினைச் சொற்கள்; அவை கூட்டுத்தொடர்களை எளிதில் தவிர்ப்பதோடு முயற்சியைக் குறைத்தும் சொல்லழகும் கவர்ச்சியும் உண்டாக்கும். பிறவினைக்குச் சிறிய மாற்றத்துடன் புதியசொல் படைக்கவும் உதவும்.

தொழிற்பெயர்ச் சொல்லாக்கம்: இதுவும் தமிழ்மொழிக்கே சிறப்பான சொல்லமைப்பு வலிமை ஆகும். பண்புப் பெயர்கள், பொருட்பெயர்களைப் படைக்கத் திணறாமல் சொல்லவரும் கருத்திற்கே உரிய வினையை உணர்ந்து அந்த வினைக்கான சொல்லோடு முப்பதுக்கும் மேற்பட்ட தொழிற் பெயர் விகுதிகளினின்று தகுந்தவொன்றைக் கோத்துப் புதுச் சொல்லைச் சட்டெனப் படைப்பது.

மிகுசுமட்டல்: ஏற்கனவே வழங்கும் சொல்லுக்குப் புதிய ஆனால் குழம்பாத சூழலில் புதுப் பொருளைச் சுமட்டுதல்.

உயிர்ப்பித்தல்/மீட்டல்: பழையசொற்களை வழக்குக்கு மீட்டல்

கூட்டுத் தொடர்களிர் புதைந்த பயனுள்ள சொற்களை மீட்டல்:

பெயர்ச்சொல்லை வினையாக்குதல்: அஞ்சல் - அஞ்சலித்தல் என்பன.

பகரம்: ஆங்கிலத்தின் fibre-optic போன்று தமிழிலும் வழக்குண்டு;

ஒலியொப்புமை: ஆங்கிலவொலியொப்புமை கருதல்

வாய்பாடு தழுவிய சொல்லமைப்புகள்:

புது அமைப்புகளைத் துழாவல்: தமிழில் முன்னொட்டுகள் படைக்கவும் வழங்கவும் ஏதுக்களைக் காட்டல்.

அடுத்துச் சில முக்கியமான கருத்துகளைச் சுருங்க இங்கே காண்போம். முழுவிளக்கங்களையும் மாநாட்டின் நடவடிக்கைத் தொகுப்பில் காண்க. சொற்பகுப்பு உத்திகள், புதுச்சொற்படைப்பு ஆகிய தலைப்புகளை மேய்வோம்.

சொல்லமைப்பு விளக்கம்:

கலைச்சொல் நோக்கில் தமிழ்மொழியில் முன்று வகைச் சொற்கள் உண்டு:

1. பெயர்ச்சொல
2. வினைச்சொல்
3. அடைச்சொல் (பண்பு/அடைமொழி)

பெயர்ச்சொல் பொருளையோ கருத்தையோ வினைவிளைவையோ சுட்டும் சொல்:

(எ-டு) கணினி, திறப்பு, மறுப்பு

வினைச்சொல் வினையைக் குறிக்கும் சொல்:

(எ-டு) கணி, நிரலு

அடைச்சொல் குணத்தைச் சுட்டும் சொல்:

(எ-டு) கரு, கருத்த, வலிய என்று.

தமிழில் பொதுவாக அடைச்சொற்களும் முன்னிரண்டு வகையையிலிருந்து பிறப்பவையே.
(எ-டு) வலிய < வலி; வலித்தல் = வலிமைகொள்ளுதல்

சொற்பகுப்பு:
முதலில் பெயர்ச்சொற்களை ஆய்வோம்.
பெயர்ச்சொற்கள் பொதுவாக ருவகையில் பிறக்கும்.
1. தொழிற்பெயராக: வினைச் சொல்லினின்று பிறத்தல்

தமிழில் பெரும்பான்மைச் சொற்கள் தொழிற்பெயர்ச் சொற்களே. அதாவது வினைச் சொல்லோடு சில ஒட்டுகள் கோத்துப் பெயர்ச்சொல்லாக்கிப் படைத்தவை. இங்கே அந்தத் தொழிற்பெயர்கள் பொருளுக்கும் கருத்துக்கும் பெயராகும் காரணம் ஆகுபெயர் என்பதால்.
ஒரு வினையில் ஈடுபடும் அன்றி வினையால் விளையும் பொருளுக்கும் கருத்துக்கும் அந்த வினையையே பெயராக்குவது வினையாகுபெயர். இது ஏதோ அறிஞர்கள் மட்டும்வழங்கும் உத்தி யன்று. உயிர் என்னும் சொல்லே உய் = பிழை/வாழ் என்னும் வினையின் அடியாகப் பிறந்த சொல்!

அவ்வாறு வினையைப் பெயராக்க முப்பதுக்கும் மேலே பல ஒட்டுகள் உள்ளன. சில நாம் தெரிந்தே பரவலாகப் புழங்குபவை; மற்றவை ஏற்கனவே புழக்கும் சொற்களில் இருப்பவை; ஆனால் நாம் அவற்றை அதிகமாகச் சொல்லாக்கத்தில் புழங்குவதில்லை. முழு அட்டவணையும் தொழிற்பெயராக்க உத்திகள் என்னும் தலைப்பில் உள்ள பகுதியிற் காண்க.

சில தொழிற்பெயராக்க விகுதிகள்:
அல், தல், அம், கை, ஐ, வை, பு, உள், மதி, மானம்.
எ-டு:
அல்: சொல்லல்; தல்: கடத்தல்; அம்:இடம் (இடுவது); பு: பிறப்பு; கை: வருகை;
வை: நடவை; பு: பிறப்பு; உள்: விக்குள் (விக்கு+உள்);
மதி: ஏற்றுமதி; மானம்: சேர்மானம்;

எனவே அந்த அமைப்புடைய சொற்களைக் கண்டால் அவை தொழிற்பெயர்கள் என்று அறியலாம். காட்டாக:
(எ-டு) சிவப்பு < சிவ + பு; தொகை < தொகு + ஐ; கொள்கை < கொள் + கை

2. ஏற்கனவே இருக்கும் வினைச்சொல்லோடு செய்வான் ஒட்டுகளை ஒட்டியோ, பெயர்ச்சொல்லோடு அல்லது பண்புச் சொல்லோடு ஒட்டுகளை ஒட்டியோ பிறப்பித்தல்.

(எ-டு) கணினி < கணி + னி; தெளிப்பான் < தெளிப்பு + ஆன்;
தனிப்பம் < தனி + பம் (separateness); நுண்மம் < நுண் + மம்;
பாய்மம் (fluid) < பாய் + மம்; நீராளம் (நீர்மிகுதி) < நீர் + ஆளம்; காற்று < கால் + து; வெப்பம் < வெ + பம்

வேர் காணல்:
வேர்ச்சொல்லைக் கண்டுகொண்டு சொல்படைப்போர்க்கு வரம்பற்ற வளமை பிறக்கிறது. வேர் என்பது குறிப்பிட்ட வடிவம் உடையது. வேரில் ஒரே ஓர் உயிர் மட்டுந்தான் இருக்கும். வேரைத் தனியே வழங்குவது பெரும்பாலும் முடியாது. இன்னும் அதை நீட்டினால்தான் முடியும்.

வழங்கு, வழி இரண்டுக்கும் வழ்- என்பது.
நிழலின் < நிழ்-.

நிகழ்ச்சி < நிகழ் < நிக்-/.
பல சமயங்களில் ஒரே வேர் ஒழுங்கின் படி ஒலிமாறி உருமாறி வழங்கும்.
யகரம் சகராமாவது வழக்கம். மேலும் முதலுயிர் நீள்வதும் அவ்வாறே வழக்கம்.
கர்-கார்: கரு-கார்; நெய்-நெச்: நெயவு> நெசவு என்று.
பை = பச்சை; அது பச்-/பாச்- என்று மாறும். பச்சை, பாசி ஆகியன அதே வேரின் பிறப்புகள்.

வேரோடு பல சொல்வளர்ச்சி ஒட்டுகளைக் கோத்து நாம் எண்ணற்ற சொற்களைப் பெறலாம். வினையும் பெறலாம்; பெயரும் பெறலாம்.
புள்ளியியலில் பயிலும் சில நிகழ்ச்ச ிசார்ந்த கருத்துகளுக்கு நாம் நிகம், நிகு என்று படைக்கலாம்!

## புதுச் சொல்லாக்க உத்திகள்:

1.ஏற்கனவே உள்ள சொல்லோடு புது ஒட்டுகள் கோத்தல்
இங்கே ஏற்கனவே இருக்கும் வினை, பெயர் அல்லது பண்புச் சொற்களை
நீட்டுகிறோம்.

1.1. வினைச்சொல்லினின்று புதுத் தொழிற்பெயர்ப் படைப்பு:
இயங்கு > இயங்குள் (engine)
பற > பறதி (aircraft) ஊர்வது ஊர்தி: பறப்பது பறதி
நில் > நிற்பனை (வில் > விற்பனை)

1.2. பெயர்ச்சொல்லை நீட்டல்:
இங்கே சில சொல்வளர்ப்பு ஒட்டுகளைப் பெயர்ச்சொல்லோடு கோத்து நீட்டிப் புதுச்சொல் படைக்கிறோம்:

சுட்டி > சுட்டிகை (mouse)
சுட்டு > சுட்டியல் (directory, index)
உரு > உருபு (glyph)
ளம் > ளந்தை (youth)
மகம் > மகந்தை (offspring); ருபாற்கும் பொது.
எழுத்து > எழுத்தம் (character)

2. வேரினின்று புதுச் சொல் படைத்தல்.
புதியவை பெயராகவோ வினையாகவோ ருக்கலாம்.

பலகை: வேர்ச்சொல்: பல்-
panel = பலகு, பலகம்
zip = பலு (பல் கொண்டது)

abstraction = நுண்மி
concretize = பருமி
பல சூழல்களில் நாம் ஒரே சொல்லை வைத்துக்கொண்டு நீட்டி நீட்டிச் சொற்கள் படைத்தாலும் ஒரு வரம்பை யெட்டுகிறோம். சொல் நீள்கிறது; அல்லது எல்லாம் ஒன்றே போல் தோன்றும். அச்சமயங்களில் நாம் வேருக்குச் சென்றால் விடுதலை கிட்டும். மேலும் ஒரே நேரத்தில் நாம் வினைச்சொல், வினைசெய்வான் என்று இரண்டையும் படைக்கவாய்க்கும்.

காட்டாக camera: அதற்குப் பொதுவாகப் புகைப்படக்கருவி, நிழற்படக்கருவி யென்று நீட்டிப் படைப்பார்கள். எந்தச் சொல்லும் புழங்காமைக்கு ஒரு காரணம் அடக்கமாகக் குறுக்கமாக இல்லாமல் நீள்வதுதான்.ஆனால் வேரினின்று சுருங்கிய புதுச்சொல் படைப்பது எப்படி யென்று காண்போம்.

photographing/camera-க்குப் புதுச்சொல்:
அதன் உரித்தான செயல் நிழற்படம் (image) பிடிப்பது.
நிழலின் வேர்ச்சொல் = நிழ்-.
இதினின்று முதலில் நாம் வினையை அமைபோம். பின்னர் அந்த வினைசெய்யும் செய்வான் பெயரை அமைப்போம்.

நிழம்பு = நிழல்பிடித்தல்/பதித்தல்
நிழம்பி = நிழல்பதிக்கும் கருவி = camera.
நிழம்பு என்பதில் உள்ள பு உள்ளொட்டு (inner affix) எனப்படும். நிரம்பு (< நிர்-) என்பதிற்போல் வேரோடு ம் என்னும் மெய்யோடு கோத்தால் தன்வினை கிட்டும்; பிறகு அதை நிரப்பு என்பதுபோல் பிறவினை வடிவு பெற வலித்தால் போதும்.